Crl.Misc.39

# D E P O S I T I O N  O F  W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.1/2018

**P.W**. 5(LW4)

| | |
|---|---|
| Name | : **திரு.மாரி** |
| Father/Husband Name | : **திரு.** இருசப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 மற்றும் 5 வது எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 3 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நத்தம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தனசேகர் என்னுடைய ஊரை சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள் காலை 6.30 மணியளவில் என்னுடைய வீட்டிலிருந்து மாட்டை கட்டிவிட்டு ரோட்டிற்கு வந்தபோது சிறிது தூரத்தில் போலிசார் பெரிய தெரு என்ற இடத்தில் பார்வையிட்டு படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். அதில் என்னையும் சாட்சி தனசேகரனையும் சாட்சியாக கையொப்பம் செய்ய சொன்னார்கள். நாங்கள் கையொப்பம் செய்தோம். பூபதி வீட்டில் திருடுபோய்விட்டதாக விசாரணை செய்து படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரான பூபதி என்னுடைய உறவினர் ஆவார். போலிசார் காலை 6 மணியளவில் தான் படம் வரைந்தார்கள். இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த வழக்கில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றாலும், தற்போது இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஒரு இடத்தில் தான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.1/2018

**P.W**. 6(LW5)

| | |
|---|---|
| Name | : **திரு.தனசேகர்** |
| Father/Husband Name | : **திரு.**மாணிக்கம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 மற்றும் 5 வது **எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 3 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நத்தம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி மாரி என்னுடைய ஊரை சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.**

**சுமாராக 2016 ம் வருடத்திற்கு பிறகு ஒரு நாள் நான் கழனியில் இருந்து வந்துக் கொண்டிருந்த போது போலிசார் படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். அதில் என்னை சாட்சியாக கையொப்பம் செய்யுமாறு போலிசார் கேட்டுக் கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு குறித்து வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.**

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>**

கடந்த 13.07.2017ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் நான் கழனிவேலை முடித்துவிட்டு வந்துக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது பெரியத்தெருவில் உள்ள பூபதி என்பவரின் வீட்டில் போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது என்னையும் சாட்சி மாரி என்பவரையும் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றால் எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.